**திருவாரூர் - மன்னார்குடியில் மீன்வளத்துறை மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் இணைந்து நடத்தும் மீன்வளர்போர் விழிப்புணர்வு கருத்துரங்கம் மற்றும் கண்காட்சி பொருவிழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தொடங்கிவைத்தார்.**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் இன்று (21.4.2015) மீன்வளத்துறை மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் இணைந்து நடத்தும் மீன்வளர்போர் விழிப்புணர்வு கருத்துரங்கம் மற்றும் கண்காட்சி பொருவிழாவை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தொடங்கிவைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்ததாவது...

தமிழகத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்நாட்டு மீன் வளர்ப்பில் அதிகப்படியான மீன் உற்பத்தியில் திருவாரூர் மாவட்டம் முக்கிய பங்காற்றுகிறது.அதன்படி மீன் வளர்போர் மேம்பாட்டு முகமையின் வழிகாட்டுதல் மூலம் 650 குளங்கள் 520 ஹெக்டேர் பரப்பளவில் வெட்டப்பட்டு மீன்வளாப்பு செய்யப்படுகிறது.மேலும் தமிழகத்தில் அதிகப்படியான பண்ணைக்குட்டைகள் திருவாரூர் மாவட்டத்தில் மட்டுமே உள்ளது.இதில் 2013-2014 ஆம் ஆண்டில் 941 பண்ணைக்குட்டைகளும்(36 ஹெக்டேர்)2014-2015 ஆம் ஆண்டில் 225 பண்ணைக்குட்டைகளிலும்(10 ஹெக்டேர்)மீன் குஞ்சுகள் மீன்வளர்ப்பு துறையின் மூலம் இருப்பு செய்யப்பட்டது.இம்மாவட்த்தில் மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் 7 எண்ணிக்கையிலும்,மீன்குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால் 20 எண்ணிக்கையிலும் மீன்தீவன தயாரிப்பு ஆலை 1 எண்ணிக்கையிலும் செயல்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் மீன் வளத்துறை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.அதன்படி தேசிய புரத உணவு இணைவு திட்டம் மூலம் புதிய மீன்வளர்ப்பு குளம் வெட்ட மானியமாக ரூ.2 லட்சம் ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறுது.மேலும் தேசிய புரத உணவு இணைவு திட்டம் கீழ் புதிய மீன்குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால் அமைக்க மானியமாக ரூ.2 லட்சத்து 40 ஆயிரம் ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறது.மாவட்ட மீன் வளர்போர் மேம்பாட்டு முகமையின் மூலம் புதிய குளம் அமைக்க மானியமாக ரூ.60 ஆயிரம் ஒரு ஹெக்டேருக்கும்,பல்நோக்கு பண்ணைக்குட்டை விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு குறித்த பயிற்சி மற்றும் தீவனம் மீனுவளத்துறையின் மூலம்

வழங்கப்படுகிறது.மீன்குஞ்சு வளர்ப்பு உள்ளீட்டு மானியமாக ரூ.50 ஆயிரம் ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறது.அதிக அடர்த்தியில் மீன்குஞ்சு இருப்பு செய்து மீன்வளர்ப்பு செய்திட ஏதுவாக ஜெனரேட்டர்,ஏரேட்டர் மற்றும் பறவை தடுப்பு வலை ஆகிய இனங்களுக்காக ரூ.1 லட்சத்து 12 ஆயிரத்து 500 மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.எனவே மீன் வளர்ப்பின் மூலம் ஒட்டு மொத்த உற்பத்தி திறனை முழுமையாக எய்திடும் பொருட்டு விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பின் மூலம் கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.அரசின் திட்டங்கள் மற்றும் மானிய உதவிகளை பயன்படுத்தி மீன் வளாப்பு பணியில் வளர்ச்சி காண வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மீன்வளத்துறையின் சார்பில் ரூ.30 ஆயிரம் மதிப்பிலான வெளிப்பொருத்தும் இயந்திரம் 4 நபர்களுக்கும் ,வலை மானியமாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் 4 நபர்களுக்கு ரூ.20 ஆயிரத்திற்கான காசோலையையும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.

முன்னதாக மீன் வளத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களிடம் விளக்கம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மீன் வளத்துறையின் இணை இயக்குனர் (நாகப்பட்டினம்) திரு.சுப்புராஜ், வேளாண் இணை இயக்குனர் திரு.மயில்வாகணன்,கோட்டாச்சியர் திருமதி.செல்வசுரபி, கடல் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் துணை இயக்குனர் முனைவர் .விஜயகுமார்,நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.ரவிசங்கர்,மீன்வளத்துறையின் உதவி இயக்குனர் திரு.திருநாவுக்கரசு, மீன்வளத்துறையின் சார்ஆய்வாளர் திரு.ரெங்கநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.